தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 16-11-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் மண்வள விழிப்புணர்வு பேரணி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழக மண்ணியல் துறை மற்றும் நாட்டு நலப்பணித்திட்டம் இணைந்து இன்று (16-11-2015) சர்வதேச மண்வள ஆண்டு 2015-ஐ முன்னிட்டு விழிப்புணர்வுப் பேரணி நிகழ்த்தியது.

மண் அரிமானம், மண் இடர்பாடுகள், முறையற்ற மண் மேலாண்மை, நிலத்தடி நீர் தரம் குறைவு ஆகியவற்றால் மண்வளத்தைப் பாதுகாக்கும் அவசியத்தை வலியுறுத்தும் விதமாக ஐக்கிய நாடுகள் சபை 2015ஆம் ஆண்டை சர்வதேச மண்வள ஆண்டாக அறிவித்துள்ளது.

மண்வள உத்திகளை விவசாயிகளுக்கு கூறுவதோடு மட்டுமல்லாபமல் மண்ணின் செயல்பாடுகளை பள்ளி மாணவர்களுக்க எடுத்துரைக்கவும், விழிப்புணர்வு பேரணி மூலம் மக்களுக்கு கொண்டு செல்லவும் மண்ணியல் துறை திட்டமிட்டுள்ளது. அதன்படி, கோயமுத்தூர், திருச்சி, தஞ்சாவூர், பெரம்பலூர் மாவட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி சிறார்களுக்கு விழிப்புணர்வு உரை நிகழ்த்தப்பட்டது.

இன்று (16-11-2015) அன்று 400 நாட்டு நலப்பணித் திட்ட மாணவ, மாணவியர் பங்குபெற்ற பேரணி நிகழ்ந்தது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் முனைவர். ச. மகிமைராஜா அவர்களும், இயற்கை வள மேலாண்மை இயக்கக தனி அலுவலர் முனைவர். வ.பெ. துரைசாமி அவர்களும் பேரணியைத் துவக்கி வைத்தனர்.

பேரணியில் மண் வளமே மனித வளம், மண் இல்லையேல் உயிர் இல்லை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை செய்வீர் போன்ற கோஷங்கள் எழுப்பி பதாகைகள் ஏந்தி சென்றனர்.

இந்நிகழ்ச்சியின் மூலம் மண்ணைப் பாதுகாத்தால் தான் மக்கள் வளமாக வாழ முடியும் என்றும் மாணவர்கள் இயற்கை வள மேலாண்மையில் பங்கு பெற வேண்டும் என்றும் எண்ணம் விதைக்கப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மண்ணியல் துறைத் தலைவர், முனைவர். வி.வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்திய மண்ணியல் குழும கோவை பிரிவு நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள், பேராசிரியர்கள், நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர். க. குமுதா, திட்ட அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சட்ட ஒழுங்கு பாதுகாப்பு ஏற்பாட்டை B2 காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு. பாலசந்தர், திரு. ராதாகிருஷ்ணன் மற்றும் குழுவினர் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பாதுகாப்பு அலுவலர் திரு. இளங்கோ ஆகியோர் மேற்கொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மண்ணியல் துறை உதவிப் பேராசிரியர்கள் லதா மற்றும் கோபாலகிருஷ்ணன் மற்றும் பேராசிரியர் வடிவேல் மற்றும் மண்ணியல் துறை அலுவலர்கள் மற்றும் மாணவர் சூர்யகுமார் மற்றும் குழுவினர் செய்தனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்